சொன்னார்கள். எற்கனவே இடைக்காலமாக பள்ளிகள், கல்லூரிகளை எடுத்துக் கொள்ளச் சட்டம் இருக்கிறது. அந்த சட்டம் போதவில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே அதை மாற்றி அமைத்து தவறு செய்யும் பள்ளிகளை அரசாங்கமே நிரந்தரமாக எடுத்து நடத்துவதற்கு அந்தச் சட்டத்திற்கு ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வருவதற்கும், அதுபற்றி அரசாங்கச் சட்ட இலாகா பரிசீலித்து வருகிறது. அது எந்த அளவுக்கு அரசமைப்பு சட்டத்துக்கு உட்பட்டுக்கொண்டு வர முடியும் என்பதைப் பரிசீலித்து அதற்கான முயற்சிகள் எடுக்க முடியும் என்று கருதுகிறேன்.

The Resolution, was by leave withdrawn.

(2) BONUS TO TEACHERS.

MR. CHAIRMAN : The next Resolution stands in the name of the hon. Member Thiru G. Krishnamoorthy, the Deputy Chairman. He may move the Resolution, get it seconded and then speak on the Resolution.

THIRU G. KRISHNAMOORTHY : Mr Chairman, Sir, first I seek your permission to speak from this seat. Secondly, Sir, there is an idea that a Member elected to the office of the Deputy Chairman cannot have as much freedom of speech as he had when he was a Member.

MR. CHAIRMAN : I said the other day that from a talking place you were coming over to a non-talking place.

THIRU G. KRISHNAMOORTHY : I have seen, Sir, the former Deputy Chairman speaking. I think there is no restriction.

MR. CHAIRMAN : The hon. Member can speak. He is not completely muffled.

THIRU G. KRISHNAMOORTHY : Sir, this Resolution that I have brought before the House, if accepted by the Hon. Minister and the Government . . . .

MR. CHAIRMAN : He may formally move the Resolution, get it seconded, and then speak on it.

THIRU G. KRISHNAMOORTHY : Mr. Chairman, Sir, I move :

"This House recommends to the Government that teachers of all grades under all Agencies be paid at the end of each academic year 25 per cent of the total salary drawn by them during that year as Bonus".

THIRU M. SANKARALINGAM PILLAI : I second the Resolution, Sir.

THIRU G. KRISHNAMOORTHY : Sir, the word 'Bonus' may rather sound strange with regard to these institutions. The idea why I have worded this resolution like this is this. The teachers have been requesting for the appointment of a Second Pay Commission to revise their scales of pay. I note from the replies of

[Thiru G. Krishnamoorthy] [27th March 1969

the Hon. Minister and the position stated in the Budget, that it may not be immediately possible to raise the salaries of the teachers to any appreciable or desirable extent involving some Rs. 8 or Rs. 9 crores.

Sir, education has been the responsibility of the Government, but the immediate benefit of education goes to the parent. The Government should not forget the fact that the immediate beneficiary in education is the parent and the ultimate beneficiary is the Government. So there is nothing wrong in the Government demanding certain items of finance from the parents, who get the immediate benefit from the education imparted by the Government. Now, Sir, the idea of collecting one rupee per month from each student does not appeal to the Government, it appears to me. But now the Government themselves have come forward for creating a fund called the Teachers' Welfare Fund, more or less, in line with the idea contained in the Resolution that has been moved by me, at the State level with the State contributing something like a matching grant and there may even be a demand on the Centre to contribute to that Fund. If the Government would carry that idea a little further they would see that if a sum of Rs. 2 crores is collected from the students, they can contribute Rs. 2 crores and ask the Centre to contribute Rs. 2 crores to the Fund. The Tamil Nadu Government can set an example to the other States in our Bharath with regard to this. And to collect Rs. 2 crores it is not necessary to take to collection of Re. 1 per month per pupil. It is enough if one rupee per quarter is collected from each student, for every term in high schools and elementary schools. The collection may be termed 'Guru Dakshina' or 'Teachers' Welfare Fund'. This collection of Rs. 2 crores at one rupee per pupil per term in all institutions from the elementary to the collegiate level might form the nucleus. The State Government may contribute an equal amount and an equal amount, if not an equal amount at least fifty per cent could be got from the Central Government. Thus the Government will be able to raise a fund of Rs. 5 crores which will suffice to pay the teachers the bonus of 25 per cent of the annual salary drawn by teachers. I have calculated the figures. The Higher grade teacher will get Rs. 20 a month. a Secondary Grade teacher will get Rs. 25 a month and an L.T. Rs. 50 a month. So if that is given as a salary increase without taxing the exchequer much—the Government will have to contribute only Rs. 2 crores—and without depending too much on the parents as they think that will be a tax on the parents, it will be a good idea. My purpose in moving the Resolution is to create an opinion in the present Government that this Welfare Fund may be worked on these lines with a collection of only Rs. 2 crores from the pupils, with anequal contribution from the State Government and whatever we get from the Central Government, so that we can be a model to the other States to solve the problem of the

27th March 1969] [Thiru G. Krishnamoorthy]

teachers' salary without taxing the State or the Central Government too much. I request all hon. Members to support the Resolution and request the Government to just consider the suggestion put forward by me in regard to the creation of the Teachers' Welfare Fund.

MR. CHAIRMAN : The Resolution is before the House for discussion. 6–20

திரு எஸ். ராகவானந்தம் : தொழிலாளர்களின் தலைவனாக இருந்து கொண்டு இதை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதற்கு நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். 25 சதவீதம் போனஸ் என்று சொல்கிறார்கள். போனஸ் என்பது ஜெனரல் word. அது attendance bonus, incentive bonus, profit sharing போனஸா என்று தெளிவாக்கப் படவில்லை. போனஸ் சட்டத்தின் 10-வது செக்ஷன்படி தெளிவாக இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். Incentive Bonus ஆக இருக்க முடியாது. Attendance Bonus என்று இல்லை. அவர்கள் கேட்பது 25 சதவீதம் profit sharing போனஸ். அந்தக் கருத்திலே கேட்டிருந்தால் யாரும் லாபம் வரும்போது profit sharing Bonus கொடுக்க வேண்டுமென்று தான் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் யார் யாருக்கு போனஸ் ஆக்ட் applicable என்று சட்டத்திலே இருக்கிறது. இதற்கு Bonus Act-ம் apply ஆகவில்லை. டிபார்ட்மெண்ட்டால் நடத்தப்படும் தொழில்களுக்கு போனஸ் ஆக்ட் applicable ஆகாது. டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டில் போனஸ் ஆக்ட்படி அதிலே வேலை செய்கிறவர்களுக்கு போனஸ் கிடையாது. Railway Department-ல் போனஸும் கிடையாது. Postal Department do not give bonus. Railway-லிலே போனஸ் கிடையாது. Railway Department ஆகையால் போனஸ் கிடையாது. எலெக்டிரிசிடி போர்டு அங்கே போனஸ் உண்டு. டிபார்ட்மெண்ட் என்று சொல்லாமல் கார்ப்பரேஷன் என்று சொன்னால் போனஸ் பெற உரிமை இருக்கிறது. 25 சதவீதம் போனஸ் வேண்டுமென்று கேட்பது profit sharing ஆக இருந்தால் அது சட்டப்படி செல்லாது. அதை ஆதரிக்கக் கூடிய நிலையில் இல்லை.

இரண்டாவது போனஸ் சட்டப்படி லாபம் இருந்தாலும் நஷ்டம் இருந்தாலும் ஒரு தொழிலில் போனஸ் கொடுத்தாக வேண்டும். போனஸ் சட்டத்தின் 10-வது செக்ஷன்படி போனஸ் கொடுத்தாக வேண்டும். அதிகமாக லாபம் வந்தாலும் 25 சதவீதத்திற்கு மேல் போனஸ் கொடுக்க வேண்டியதில்லை. எந்த வீதத்தில் பார்த்தாலும் 25 சதவீதம் போனஸ் கொடுப்பதை ஆதரிக்க முடியாது. எனவே ஆசிரியர்களுக்கு 25 சதவீத போனஸ் கேட்பதற்கு சட்டபூர்வமாக உரிமை இல்லை. Applicable surplus, allotable surplus, available surplus என்பதை யெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு, இப்படி 25 சதவீதம் போனஸ் என்று போனஸ் சட்டத்திலே வரையறுத்திருக்கிறார்கள். எந்த அடிப்படையில் பார்த்தாலும் இதை ஆதரிக்க முடியவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எம். சங்கரலிங்கம் பிள்ளை : ஆசிரியர்களுக்கு இப்படி 25 சதவீதம் போனஸ் கேட்பதற்கு உரிமை இல்லை என்று சட்ட நுணுக்கத்தை எல்லாம் காட்டி முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதன் நோக்கமே ஆசிரியர்களுக்கு ஏதாவது சம்பள உயர்வு கிடைக்க வேண்டும் என்பதுதானே தவிர, மற்றபடி அவர்களுக்கு 25 சதவீதம் போனஸ் கொடுத்துத் தான் தீர வேண்டும் என்பது அல்ல. அவர்களுக்கு எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. கோதாரி கமிஷன் சிபாரிசுகளே இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. இதை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று எவ்வளவோ தடவை வற்புறுத்தி விட்டோம். அதற்கு மத்திய அரசு ஒப்புக்கொள்ள வேண்டும், உதவி தர வேண்டும். மத்திய அரசைக் கேட்டால் இதைவிட இன்னும் முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [27th March 1969

என்று சொல்லுவார்கள். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஏதாவது செய்தாக வேண்டும், வேறுபல பிரச்னைகள் இருக்கின்றன, அதனால் ஆசிரியர்களுக்குச் செய்ய முடியவில்லை என்று காரணம் சொல்லுவார்கள். அதனால் ஆசிரியர்களுக்கு அந்தச் சமுதாயத்திற்கு ஏதாவது வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று இப்படி 25 சதவீதம் போனஸ் என்று கேட்டு இருப்பார்கள் என்று நினைக்கிறேன். வேறு ஏதாவது வார்த்தைகளைப் போட்டாலும் அவர்களுக்கு சில நன்மைகள் கிடைக்க வழி செய்ய வேண்டும். அவர்களின் சம்பளத்தைக் கொஞ்சம் கூட்டிக் கொடுக்க வகை செய்ய வேண்டும். அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். அதோடு ஆசிரியர்களுக்கு இருக்கும் இந்தக் குறைந்த சம்பளத்தில் இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இடங்களில் ஆசிரியர்கள் ஏற்கனவே பெற்ற சம்பளம் அதிகமானது என்று சொல்லி அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று உத்திரவு போட்டு இருக்கிறார்கள். பல ஆசிரியர்களுக்கு சுமார் 200 ஆசிரியர்களுக்கு **recovery** செய்யவேண்டும் என்று உத்தரவு போட்டு இருக்கிறார்கள். இதை **Recover** செய்யவேண்டியதில்லை. ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளம் உயர்வு சரிவரக் கொடுக்கப்படவில்லை. நியாயப்படி வாங்கவேண்டிய சம்பளமே அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் அவர்களிடம் இருந்து அதிகமாக வாங்கி விட்டீர்கள், உடனே திருப்பிக் கொடுங்கள் என்று உத்திரவு போட்டிருக்கிறார்கள். திருவாங்கூர்-கொச்சி யிலிருந்து ஆசிரியர்களில் இவ்வுத்தரவை எதிர்த்து மூன்று மாதமாகச் சம்பளம் வாங்காமல் இருக்கிறார்கள். **Recovery** நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்யப்பட்டு பல ஆசிரியர்கள் இருக்கிறார்கள். போனஸ் கொடுங்கள் என்று கேட்டு இருக்கிறார்கள். போனஸாக இல்லாவிட்டாலும் வேறு ஏதாவது சம்பள உயர்வு கொடுங்கள். அதிகப்படி சம்பளம் வாங்கி விட்டீர்கள் திருப்பிக் கொடுங்கள் என்று போட்டு இருக்கிற உத்திரவை நிறுத்தி வையுங்கள். கோதாரிக் கமிஷனின் சிபாரிசுகளை அமுல் நடத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள். அண்டையில் உள்ள கேரள மாநிலத்தில் செகண்டரி கிரேட் ஆசிரியர் களுக்கு 10 ஆசிரியர்களுக்கு ஒரு **First grade** என்று மாற்றி அமைத்திருக்கிறார்கள். 130—240 என்ற சம்பள விகிதத்தில் மாற்றி அமைக்கப்பட்டு இருக்கிறது. செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் என்பது எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு டிரெயினிங் முடித்தவர்கள். இதை யெல்லாம் உடனடியாக நடத்த முடியாது என்று சொல்வார்கள். ஆனாலும் பணம் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் அவர்களுக்கு செய்ய வேண்டிய நீதியைச் செய்யக்காலம் தாழ்த்தக் கூடாது என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆசிரியர்களின் நிலையை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்தத் தீர் மானத்தின் அடிப்படை நோக்கம் ஆசிரியர்களுடைய நல்வாழ்விற்காக நல்ல திட்டங்களை அரசு மேற்கொள்ள வேண்டுமென்பது. அதை ஆசிரியர் களுடைய பிரதிநிதிகள் இங்கே வலியுறுத்தினார்கள். இந்தப் பகுதியை மட்டும் நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் ஒத்துக் கொண்டது போல, நம்முடைய தொழிலாளர் பிரதிநிதி சட்ட நுணுக்கத்தோடு வாதிட்டது போல, போனஸை ஆசிரியர்கள் கேட்பது சரிப்பட்டு வராது என்பதை ஆசிரியர்கள் பிரதிநிதிகளே ஒப்புக் கொள்ளுவார்கள். போனஸ் என்றாலே லாப நோக்கத்தோடு நடத்தப் படுகிற ஒரு தொழில் என்ற கருத்து ஏற்பட்டு விடும் என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளுவார்கள். ஆகவே, அந்த போனஸ் வேண்டாம் என்பதை மறைமுகமாக ஒப்புக் கொண்டதில் எனக்கு மகிழ்ச்சி. ஆனால் வேறு வகையில் ஆசிரியர்களுக்கு நல்ல வசதிகளைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்பட்டதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறது. நமக்குள்ள பிரச்னைகளையும் பார்க்கவேண்டும். ஏதோ அரசாங்கம் ஏராளமான பணத்தை வைத்துக் கொண்டு கொடுக்க மறப்பது போல எண்ணிக் கொண்டு கூறமாட்டார்கள் என்று நம்புகிறேன். அதுவும் ஆசிரியர்களைப் பொறுத்த அளவிற்கு ஒரு சிறு துளி உதவி செய்ய.

27th March 1969] [திரு. செ. மாதவன்]

முயற்சித்தாலும் ஏராளமாக பணம் தேவைப்படுகிறது. காரணம் ஏராள மான ஆசிரியர்கள் இந்த மாநிலத்தில் பரந்து கிடக்கிற காரணத்தினுல், இலவசக் கல்வி திட்டத்தை முன்னுலே இருந்த ஆட்சியும் இன்றைய ஆட்சியும் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றி வருகிற காரணத்தினுல், ஒரு சிறு துளி உதவியும் பெரும் வெள்ளமாக நிதி நிலை அறிக்கையைப் பாதிக்கின்ற அளவிற்கு சூழ்நிலை இருப்பதனுல் தயக்கம் அடைகிருேம். கனம் கன்னியாகுமரி மாவட்ட அங்கத்தினர் அவர்கள் சொன்னது வேறு கருத்து திருவிதாங்கூர் பகுதி ஆசிரியர்களுக்கு சில சங்கடங்கள் இருப்பதை நாம் உணருகிருேம். அதே போல சில சங்கடங்கள் நீக்கப்பட்டிருக் கின்றன என்பதும் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். நீக்கப்படாத காரியங்களுக்குக்கூட நான் அவர்களை அழைத்து ஒருமுறை பேசினேன். அதிலே பணம் பாதிக்காத அளவிற்கு எதை நிறைவேற்ற முடியுமோ அதையெல்லாம் நிறைவேற்றுவதற்கும் ஒப்புக் கொண்டிருக்கிருேம். கன்னியாகுமரி மாவட்டத்தில் சங்கடங்கள் இருக்கும்போதெல்லாம் அதைப் போக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லுவதற்கு ஆசைப்படுகிறேன். அவர்கள் ஆசிரியர்கள் பிரச்னையைச் சொல்லும்போது, ஆசிரியர்களுக்குத் தான் சம்பளம் குறைவு. மற்ற எல்லோருக்கும் இல்லை என்று கருத மாட்டார்கள் என்று நம்புகிறேன். அவர் சொல்லுகிற தொனி வெளியில் உள்ளவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை ஏற்படுத்தி விடும். ஆசிரியர்களுடைய பிரதிநிதி ஆசிரியர்களுக்காக வாதாடு கிருரே, மற்ற அலுவலர்கள் குறைந்த சம்பளத்தில் இருக்கிருர்களே இப்படி ஓர வஞ்சமாக இருக்கிருர்களே, என்று அவர்கள் நினைக்கக் கூடாது என்பதற்காக நான் இதை விளக்குகிறேன். நம்முடைய அரசைப் பொருத்த அளவிற்கு, சம்பளம் குறைந்த உத்தியோகங்கள் ஏராளமாக இருக்கின்றன. விலைவாசி ஏறிவிட்டது. சம்பளத்தைக் கூட்டவேண்டும், பஞ்சப்படியைக் கூட்டவேண்டும் என்ற.கோரிக்கை, அதனுடைய விளைவு அரசாங்கம் அதனுடைய நிதிநிலை அறிக்கையில் ஏராளமான பணத்தை அரசு ஊழியர்களுக்காக ஒதுக்குகிறது. இது நம்முடைய பொருளாதார விளைவு. விலைவாசி ஏற்றம், அதற்காக கூடுதல் பஞ்சப்படி, இப்படி சுற்றி வட்டம் இடக்கூடிய ஒரு நிலைமை தான் "Vicious Circle" 6–30 p.m.
என்று சொல்லுவது போல இருக்கிறது. விலைவாசிகளைக் குறைப்பதா அல்லது அதற்குத் தக்கபடி கூடுதலாக பணம் கொடுத்துக் கொண்டு போவதா என்பதைப்பற்றி பொருளாதார நிபுணர்கள் சிந்தித்து அதைப் பற்றி ஆலோசனைகளைக் கேட்டு ஏதாவது ஒரு இடத்தில் விலைவாசிகளைக் குறைத்து, ஊழியர்களுடைய நல்வாழ்விற்கு வாய்ப்புத் தந்தால் தான் இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு கட்ட முடியும் என்பது இந்த அரசாங் கத்தின் கருத்தாகும். சம்பளம் உயர்த்துவதால் மட்டும், பஞ்சப்படி உயர்த்துவதால் மட்டும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் பிரச்னை தீர்ந்து விடும் என்று நான் நம்பவில்லை. ஆசிரியர்கள் பிரச்னையில் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்து முடிவெடுக்க வேண்டும். அது மட்டுமல்ல, இலவசக் கல்வி திட்டத்தை ஏற்றுக் கொண்ட காரணத்தினுல் நம்முடைய நிதிநிலை யில் பெரும்பகுதியை கல்வித் துறைக்குச் செலவு செய்துகொண்டிருக்கிருேம். ஆண்டு தோறும் பல கோடி ரூபாய் கூடிக்கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிருேம். கல்வித்துறையில் அதிகமாக செலவிடும்படியான சூழ்நிலை ஏற்படுகிறது. அதனுல் இந்த ஆசிரியர்களுக்கு ஒன்றுமே இல்லை, ஒன்றுமே செய்ய மாட்டோம் என்று சொல்லுவதை அரசாங்கம் சரி என்று ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. அது மட்டுமல்ல ; ஆசிரியர்களுக்கு, தனியார் துறையில் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்கள், அரசாங்கத்துறையில் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்கள், உள்ளாட்சித்துறையில் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்கள், இவர்களுக்குள்ளே சம்பள வேறுபாடுகள் இருக்கின்றன என்ற குறை இருந்து வருகிறது. எந்தக் குறையானுலும் சொல்லக் கூடாது, சொல்லுவது தவறு என்று சொல்லவில்லை. அவர்களுக்கும் அதைக் கொடுக்க வேண்டும். அரசாங்கத்தில் பணியாற்றுகிற ஆசிரியர் களைப்போல அவர்களுக்கும் கொடுக்கவேண்டும். ஒரு சிறு நன்மை செய்ய முனைந்தாலும், எவ்வளவோ லட்சம், கோடி ரூபாய் என்று வருகிற காரணத்தினுல், கொஞ்சங் கொஞ்சமாக நிறைவேற்றி வருகிருேம். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னுல் எத்தனையோ சலுகைகளை நிறை வேற்றி, அதற்கு இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த அங்கத்தினர்

[திரு. செ. மாதவன்] [27th March 1969

அவர்கள் நன்றி என்று சொல்லியிருக்கிறார்கள். கேள்விக்கு மேல் கேள்வி கேட்கப்பட்ட நிலைமைகளைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நன்மைகளைச் செய்து வருகிறது. இன்னும் செய்யவேண்டும் என்ற ஆசை அரசுக்கு இருக்கிறது. தலைவர் சொன்னது போல இனிமேல் துணைத் தலைவர் அதிகமாக பேச மாட்டார்களோ என்று கவலையாக இருக்கிறது. அவர் அதிகமாகப் பேச வேண்டும். ஆசிரியர்களுடைய கோரிக்கைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு அப்போது தான் கொண்டு வர முடியும். நாமும் தலையிட் ஓரளவிற்கு செய்ய முடியும். எனக்கு மகிழ்ச்சி, ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள், எந்த சந்தர்ப்பம் கிடைத்தாலும் சரி, சந்தர்ப்பம் பொருந்துமோ பொருந்தாதோ அதை சிந்திக்காமல் ஆசிரியர்களுக்காகப் பேச வேண்டுமென்ற நல்லெண்ணம், நல்ல கருத்து அவர்களுடைய உள்ளத்தில் இருக்கிறது என்பதில் உண்மையில் எனக்கு மகிழ்ச்சி. அப்படி ஆசிரியர்களுக்காகப் பாடுபடக்கூடிய அங்கத்தினர்கள் கோரிக்கையை ஏற்கக்கூடாது, சொல்லுவது தவறு என்று அல்ல. அதற்காக இனிய வார்த்தைகள் கூறினாலும் எதையாவது செய்யவேண்டுமே என்று தோன்றுகிறது. கனம் அங்கத்தினர் திரு கிட்டிணமூர்த்தி சொன்னது போல, அரசாங்கம் இதைப் பற்றி பரிசீலித்து வருகிறது. அரசாங்கத்தின் பணம் முழுவதும் கொடுக்கப்பட்டு, ஆசிரியர்களுக்கு நன்மைகள் அதிகமாகச் செய்யமுடியாவிட்டாலும், வேறுவகையில் எதாவது திட்டம் கொண்டு வரலாமா என்று சிந்தித்து வருகிறது. நான் எதிர்க் கட்சியில் இருக்கும்போது அவர் பேசும்போது உட்கார்ந்து கேட்பது வழக்கம். குரு தட்சணையைப் பற்றிச் சொல்லுவார்கள். ஒரு ரூபாய் குரு தட்சணை என்று ஏற்றுக் கொண்டால் வேறு ஆபத்து வந்து விடும். மாணவர்கள் என்ன கருதுவார்களோ என்று கருதினாலும், ஆசிரியர்களுக்கு ஏதாவது நன்மை செய்வதற்கு ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். தொழிலாளர்களுக்கு **Employees' State Insurance** என்று வைத்திருக்கிறோம். அதற்குத் தொழிலாளர்களே ஒரு பகுதி கொடுக்கிறார்கள். நம்முடைய அரசு ஒருபகுதி, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட ஒரு கார்ப்பரேஷன் ஒரு பகுதி கொடுக்கிறது. தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி கொடுக்கக்கூடிய ஒரு சிறந்த ஏற்பாடு இருப்பது போல் அதனுடைய அடிப்படையில் ஆசிரியர்களுக்கு ஒரு நிதி எழுப்பப்பட்டு, நிதியை எப்படி எழுப்புவது, மாணவர்களிடத்தில் வாங்குவதா, அரசாங்கம் எவ்வளவு கொடுப்பது, மத்திய அரசாங்கம் எவ்வளவு தருவது பொன்ற நிலைகளைக் கவனிக்க அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அப்படிப் பரிசீலனை முடிவாகுமானால் ஆசிரியர்களுக்கு ஒருதனி நிதி எழுப்பப்பட்டு, அந்த நிதியில் மத்திய அரசும் பங்கு கொடுத்து, அதைத் தனியாக நிர்வகித்து, அந்த நிதியிலிருந்து ஆசிரியர்களுக்கு என்ன நன்மைகளையெல்லாம் செய்யலாம் என்ற சிந்தனை அரசாங்கத்திற்கு உண்டு. அந்தப் பரிசீலனை இந்த அரசாங்கத்தின் முன்னாலே இருக்கிறது. இலவசக் கல்வி திட்டத்தை பாதிக்காமல் ஓரளவிற்கே சிறு துளி கொடுத்தாலும், மத்திய அரசு கொடுக்கிற காரணத்தினால் ஆசிரியர்களுக்குத் தேவை என்று சொல்லக்கூடிய என்ன திட்டம் இருக்கிறதோ அந்தத் திட்டங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு அந்த நிதியை அரசாங்க நிதிக்குக் கொண்டு வராமல், தனியாக நிர்வகிக்கவேண்டும். ஆசிரியர்களுக்கும் அந்த அந்த நிர்வாகத்தில் பங்கு கொடுத்து ஆசிரியர்களுக்கு இப்படி ஒரு நன்மை செய்யவேண்டும் என்று கருதி அதுபற்றி சிந்தித்து வருகிறேன். இதைப் பரிசீலிக்கும்படி அதிகாரிகளிடத்தில் சொல்லி இருக்கிறேன். இந்தக் கருத்து முழு உரு பெறுமானால் ஆசிரியப் பெருமக்களுக்கு வேறு வசதிகள், வாழ்க்கைக்குத் தேவையான பல வசதிகள் சம்பளம், படி என்று இல்லாமல் பல வசதிகள் கொடுப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டு விடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த அடிப்படையில் அரசு செயல்பட்டு வருகிறது என்று தெரிவித்துக் கொண்டு, இந்த போனஸ் பிரச்னையைக் கொண்டு வந்த காரணத்தினால், இந்தத் தீர்மானத்தை திரும்பப் பெற்றுக் கொண்டு, வேறு நான் சொன்ன யோசனையைத் தவிர எதாவது யோசனை இருந்தால் தீர்மானங்கள் கொண்டு வந்தால், இந்த அரசாங்கம்

27th March 1969] [திரு. எஸ். மாதவன்]

பரிவோடு பரிசீலிக்கும் என்று கூறி, போனஸ் பற்றிய தீர்மானத்தை வலியுறுத்தக் கூடாது என்று சொல்லி என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU G. KRISHNAMOORTHY : I thank the Government for the assurance given. In view of the assurance given by the Minister for Education, I withdraw the Resolution.

The Resolution was, by leave, withdrawn.

(3) CHANGE OF NAME OF THE CAPITAL OF TAMIL NADU.

MR. CHAIRMAN : The hon. Member, Thiru N. R. Thiagarajan, is not in his seat. The resolution is deemed to have been withdrawn.

(4) COTTON MILLS WORKERS' RELIEF COMMITTEE

திரு வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட என்னுடைய தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

" தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள் திறக்கப்படும் வரை, பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக 'பஞ்சாலைத் தொழிலாளர் நிவாரணக் கமிட்டி' என்பதாக ஓர் அமைப்பினை ஏற்படுத்த வேண்டுமென்றும், இதற்காகத் தனியான நிவாரணநிதி ஒன்று ஒதுக்கலாமென்றும் இம்மன்றம் அரசினருக்குப் பரிந்துரைக்கின்றது ".

தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைக் கொடுத்த நேரத்திலே கோவையிலிருந்து ஒரு பெரிய தொழிலாளர் குழு ஒன்று சென்னை வரை பாத யாத்திரையாக நடந்து வந்து, அரசியல் சாசன அடிப்படையில் Mass petition ஒன்றை, அசெம்பிளி துணை சபாநாயகருக்குக் கொடுத்திருக்கிறது. அவர்கள் ஆக்க பூர்வமான யோசனையை அரசாங்கத்திற்கு சொல்லவும், அரசாங்கத்திற்கு இக்கட்டான எந்த நிலைமையும் ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தோடும், இப்படிப்பட்ட குழு வேண்டுமென்ற யோசனையைச் சொன்னார்கள். அரசாங்கமும் அந்த நல்ல யோசனையை ஏற்றுக் கொண்டு இப்போது கொள்கை அளவில், ஏன், செயலளவில் கூட அதை அமைப்பதற்கான எல்லாவிதமான நடவடிக்கையையும் எடுத்திருப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். இந்த நேரத்தில் கூட இந்தத் தீர்மானம் அவசியபபடுகிறது என்பதை மட்டும் ஒரு சில வார்த்தைகளில் சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கே இரண்டு விதமான பிரச்னைகள் இருக்கின்றன. டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் அமைப்பதாக அரசாங்கம் வாக்குறுதி கொடுத்தது. கொடுத்து சுமார் இரண்டு மாதங்கள் ஆகின்றன. அரசாங்கம் " அமைக்கிறோம், அமைக்கிறோம் ", என்று சொல்லிக்கொண்டிருப்பதைக் காட்டிலும் அதைத் தயவு செய்து அமைத்துவிடுங்களேன் என்று கேட்டுக் கொள்கிறேன். கார்ப்பரேஷன் அமைப்பதில் பல கசப்பான உண்மைகள் எல்லாம் இருக்கின்றன. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொன்னார்கள். குறிப்பாக சில ஆலைகளை திறக்கவே முடியாது என்றார்கள். நானும் அந்தக் கருத்தைக் கொண்டிருக்கிறேன். ஆனால் இந்தக் கசப்பான உண்மைகளை மனதில் வைத்துக்கொண்டு " திறக்கிறோம், திறக்கிறோம்" என்று வெறும் உத்தரவாதங்களை கொடுப்பதற்குப் பதிலாக எத்தனை மில்களைத் திறக்க முடியும், எந்தெந்த மில்களைத் திறக்கப் போகிறோம் என்பதை கார்ப்பரேஷன் அமைத்து திறந்து விடுங்கள் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். இதைவிட முக்கியமான விஷயம் என்னவென்றால் நிதிநிலையில் கூறியபடி இருக்காமல் இந்தக் கார்ப்பரேஷன் அமைக்கும் முயற்சியும் தேங்கிய நிலையில் இருக்கக்கூடாது.